# தமிழ் மருத்துவப் பொழில்

திங்கள் வெளியீடு

மலர் 2 | அக்டோபர் 1942 | இதழ் 10


## நமது கடன்

—[–]:—

இந்திய மருத்துவர்கள் 'ரிஜிஸ்டர்டு ப்ராக்டீஷனர் ஆப் இண்டியன் மெடிஷன்' என அழைக்கப்படுவதை மாற்ற வேண்டுமென இருந்த சர்க்கார், பொதுமக்கள் அம்மாறுதலை விரும்பாததால் தாம் எவ்வித மாறுதலையும் செய்யப்போவதில்லையென கூறியுள்ளார். இங்ஙனம் மக்களின் கருத்துக்கு இணங்கிய சர்க்காரை நாம் பாராட்டுகிறோம். குறித்தக் காலத்தில் தங்கள் கருத்தைச் சர்க்காருக்குத் தெரிவித்த பொதுமக்களுக்கு நம் வந்தனத்தைச் செலுத்துகிறோம்.

இந்திய மருத்துவத்தின் பயனைக் கண்டே மக்கள் இந்திய மருத்துவர்களை ஆதரிக்கின்றனர் என்பது சொல்லாமலே விளங்கும். மருத்துவஞ்செய்து. பிணியை நீக்குவது சிறந்த சேவையே யாயினும், இதனினும் சிறந்தது மக்களை நோயணுகாது காப்பதாம். 'நோயற்ற வாழ்வே குறை வற்ற செல்வம்' ஆகையால் மக்கள் இவ்வாழ்வைப் பெற மருத்துவர்கள் உதவி புரியவேண்டும். மேனாட்டு வைத்தியர்கள் இச்சேவையைச் சிலகாலமாகச் செய்து வருகின்றனர். சர்க்காரும் இதற்கென்று தனி இலாக்காவை அமைத்துள்ளார். அதில் வேலை செய்ய இந்திய மருத்துவர்களுக்கு உரிமை யில்லா விடினும், அத்துறையில் அவர்கள் வேலை செய்யலாம். அதனை யாவரும் வரவேற்பர். தொன்றுதொட்டு வந்த நோய் அணுகா விதிகளைத் திரட்டி ஆராய்ந்து தக்க முறையில் மக்களுக்குப் போதிக்க வேண்டும். அவ்விதிகளை அனுசரித்து வந்த நம் முன்னோர்கள் நூறாண்டு வாழ வில்லையா? நம் நூல்களும் மக்கள் வயது நூறென கூறவில்லையா?

'நோயில்லா நெறி விட்டோன் அருமியப்பா' என அகத்தியர் தம் வைத்திய காண்டத்தில் கூறியிருக்கிறார். அந்நெறிகள் பல நூல்களில் சிதைந்திருக்கின்றன. அவைகளைத் திரட்டி மக்களுக்கு ஓதுவது இந்திய மருத்துவர்களின் கடனாம். அதை ஏற்று செய்வார்களாக.

# பிச்சு

**'C. D.'**

தலைக்கு எண்ணெயிடும் *நான்கு முறைகளுள் பிச்சு என்பது தொன்றாகும். பஞ்சு அல்லது சீலையை வேண்டிய அளவு துண்டுகளாகக் கிழித்து எண்ணெயில் (தைலத்தில்) நன்றாய் ஊறவைத்து தலையின் மீது போடுவது பிச்சாகும். இம்மாதிரியே வேறு அங்கங்களுக்கும் போடலாம். உதாரணமாக விரணங்களுள்ள இடங்கள், பூட்டுகள் முதலியனவாம். இச்சிகிச்சை செய்ய செலவு அதிகமாகாது; ஆகையால் ஏழைகளுக்கு இது மிகவும் பயன்படும். இதை முறைப்படி சரிவரச்செய்தால், சிரோவஸ்தியினால் அடையும் பயன்களைச் சற்றேறக்குறையப் பெறலாம். இச்சிகிச்சை தலையிலுண்டாம் வாதநோய்களுக்கும் கூந்தல் உதிர்தல், தலைசர்மம் வெடித்தல், கண் எரிச்சல், கண்கள் சுழலாதிருத்தல் முதலியவற்றிற்கும் உபயோகப்படும்.

சிகிச்சை செய்வதற்குத் தேவையான பொருள்கள் :—

1. தலையை மூடக்கூடிய அளவுள்ள வெண்சீலை துண்டுகள் அரை அங்குல கனத்துக்கு அடுக்கக்கூடியவை.

2. எண்ணெய்.

3. தலையைச்சுற்றிக் கட்ட முறுக்கிய துணிவத்தி.

4. குளிப்பதற்கு வேண்டிய பொருள்கள்.

செய்முறை :—சிரோவஸ்திக்கு நோயாளியை எங்ஙனம் விரேசனம் முதலியன கொடுத்துத் தயாரிக்கவேண்டுமோ அங்ஙனமே தயாரிக்க வேண்டும். க்ஷீரபலா (பலாமடக்கு) பிருங்காமலகம், கார்பாசஸ்தாதி முதலிய தைலங்களில் ஒன்றை நோய்க்குத்தக்கவாறு தேர்ந்து உபயோகிக்க வேண்டும். முதலில் அதில் கொஞ்சம் எடுத்து தலையிலிட்டு தலைமுழுதும் படும்படித் தேய்த்து, தலையைச் சுற்றி நெற்றி மட்டத்தில் துணிவத்தியைக் கட்டவும். தைலத்தில் ஊற வைத்த சீலைதுண்டுகளை ஒன்றின் மேல் ஒன்றாகக் கால் அங்குல கனத்திற்கு தலையின் மீது பரப்பவும். துண்டுகளில் தைலம் வற்ற வற்ற அவைகளின் மீது அத்தைலத்தைச் சிறுகச் சிறுக விடலாம். அல்லது அவைகளை நீக்கி தைலத்தில் ஊறிய வேறு சீலைதுண்டுகளைப் போடலாம். வேறு இடங்களில் பிச்சு போட வேண்டுமாயின் அவ்வவ்விடத்திற்குத் தக்கபடி சீலையைக் கிழித்து உபயோகிக்கவும். பிச்சு செய்து முடிந்ததும் நோயாளியைக் குளிப்பாட்ட வேண்டும். குளிப்பதற்குத் தகுதி யற்றவர்களாக இருப்பின் சீலை போட்ட விடத்தைத் துடைத்து தைலத்தைப் போக்கி ஒரு சுத்த துணியால் மூடி கட்டி வைப்பது அவசியமாம்.

பிச்சு செய்ய வேண்டிய காலவரையும், குளிக்கும் முறையும், பத்தியமும் சிரோவஸ்தியில் கூறியவாறே.

---

*நான்காவன :— தாரை, சிரோவஸ்தி, பிச்சு, அப்பியங்கனம்.

# பவழம்

டாக்டர். ரு. தியாகராஜன்.

---

இது வித்துருமம், துகிர், துப்பு, பிரவாளம், வாரிதிதண்டு, செந்தண்டு, மாலை என்ற வேறு பெயர்களினாலும் வழங்கப்படும். கடல்படுதிரவியங்கள் ஐந்தனுள் இஃது ஒன்றாம். இதனை 'ஓர்க்கோலைசங்க மொளிர் பவழம் வெண்முத்த நீர்ப்படு முப்பி னோடைந்து' என்ற அடியால் அறியலாம்.

வலன் சதை கடலில் வீழ்ந்து நற்பவழமாயிற்று என்பதும் தேவேந்திரனின் வஜ்ஜிராயுதத்தினால் மலையின் சிறகுகள் கொய்யப்பட்டகாலத்து குருதியானது சமுத்திரத்தில் போய் வீழ்ந்து கொடிப்பவழமாயிற்று என்பதும் புராண வரலாறு.

நிற்க, பவழமணிக்கு குணங்கள் ஆறு என்றும் குற்றம் ஆறு என்றும் கூறப்பட்டுள்ளது. அவை சிந்தூரம், செம்மணி, செங்காய், முசுமுசுக்கைக்கனி, வீரைக்கனி, தூதுளைக்கனி என்ற அறுகுணங்களும்; பிளவு, முடக்கு, துளை, கருப்பு, திருகல், வெளிரல என்ற அறு குற்றங்களுமாம். இதனை திருவெண்காட்டடிகள் புராணத்தில் 'பவள நற்குணஞ்' என்னும் முதற்குறிப்பை யுடைய விருத்தத்தினால் அறியலாம் திருவிளையாடல் புராணத்தார் குணம் நான்கு, குற்றம் மூன்று என்று கூறுவதை 'அவ்வழியிற் படுபவன' என்ற அடியையுடைய செய்யுளினால் அறியலாம். அவை வருமாறு:-- முருக்கம்பூ, பசுங்கிளி மூக்கு, செவ்வரத்தமலர், கொவ்வைக்கனி என்னும் இந்நான்கும் குணங்களாம்; திருகிக்கோணுதல், புழுவரித்தல், முகமொடிதலாகிய இம்மூன்றும் குற்றங்களாம். மற்றும் குணமாகிய நான்கையும் பெண் மக்களே அணிய வேண்டுமேன்பது திருவிளையாடல் கருத்து. மற்றும் சிலப்பதிகாரத்தில் கொடிப்பவழ வருக்கம் கருப்பத்தே துளைக்கப் பட்டனவும், திருக்கு, முறுக்குண்டு எழுந்தனவும் என்றும் இக்குற்றம் நீங்கி செம்மை மிக்கு கொழுவிதாக வளர்ந்ததாக யிருக்கவேண்டு மென்று கூறப்பட்டுள்ளதைக் கீழ்க்காணும் அடிகளினால் உணரலாம்.

'கருப்பத் துளையவுங் கல்லிடை முடங்கலுந்
திருக்கு நீங்கிய செங்கொடி வல்லியும்'

நிற்க, பவழம் சத்தி பீசமாகிய கந்தகத்திற்கும் முத்து சிவபீசமாகிய இரசத்திற்கும் நிகரென்றும் எக்காலமும் பெருந்தன்மை படைத்த நவரத்தினத்திலேயும் பேர் பெற்றிருக்கப்பட்ட பவழமும் முத்தும் பார்வதியைப் போலும் பரமசிவனைப் போலும் பேர்பெற்று விளங்கும் என்றும் குறிப்பிடப் பட்டுள்ளது. இதனை:

தேவி யுரத்தைநேர் செப்பலாகுந் துப்பை
யாவி யிரதநே ராகு மவுத்திகந்
தேவி யரன்பீசஞ் செப்பு மிவைகளே
தேவர் முதலானோர் தேர்வ ரிவைகளே

(திருமூலநாயனார்)

ஆசங்கை யேதுக்கடி-*அகப்பாய்
அம்பிகை கந்தி துப்பே
பேசுவ தேதுக்கடி—யகப்பாய்
பிஞ்ஞகன் சூத முத்தே
நேசமி தாதுமடி—யகப்பாய்
நீதிசோல் வாகடர் முன்
கூசுவ தேதுக்கடி—யகப்பாய்
கூறுவர் பேத மிதே

(அகப்பைச்சித்தர்)

என்ற இம்மேற்கோள்களால் உணருக.

பவழத்தின் குணம்:—சுரத்திலுண்டாம் தோடம், கபம், சன்னி பாதசுரம், இருமல், அரோசகம், நாவிலுண்டாம் சுரசுரப்பு இவைகள் நீங்கு மெனவும் சரீரத்திற்குக் காந்தியுண்டா மெனவும் கீழ்க்காணும் செய்யுளால் அறிக.

சுரதோடம் ஐயமுத் தோடசுரங் காசம்
அருசிகீ டத்தாலாம் ஆலம்---பெருவிந்து
நட்டம் அதிதாகம் நாவரட்சி போமொளிவுங்
கிட்டும் பவழத்தாற் கேள்.

அன்றியும் பவழத்தைச் சேவித்தாலே க்ஷயம், பித்தம், இரத்த காசம் நேத்திரரோகம் நீங்குமென்று பெரியோர் கூறுவர்.

நகுதற்பொருட்டன் றுநட்டன் மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தற்பொருட்டு.

என குறள் கூறுகிறது. அங்ஙனமே உற்ற நண்பனைப் போல இது சேனுதிபதியாகிய சேத்துமம் அதிகப்பட்ட காலத்து அதை குறைக்கும் என்பதை 'பிரவாளபற்பமது பிரதானி நட்பாம்' என்ற தேரன் வாக்காலறிக. மற்றும் பவழத்திற்கு நரம்புத் தளர்ச்சியை நீக்கும் வன்மையும் சிறுநீரைப் பெருக்கும் தன்மையும் மலமிளக்கி, துவர்ப்பி ஆகிய செய்கைகளும் உண்டென்று கூறுவர்.

---

* குறிப்பு.—அகத்தைப் பேயாக உருவப்படுத்திப் பாடியதால் அகப்பாய் என்ற மொழி 'அகப்பேய்' என்றும் பாடியவரை 'அகப்பேய்' சித்தரென்றும் கூறவேண்டும். (ஆசிரியர்)

'பவழமப்பா மலம்போறு னன்மை யுண்டாம்
பற்பமுதலா குமதை நன்று யாடும்'

என்றும்,

'துகிரையே யழுக்கோழித்துத் துவிதமும் பண்ணலாமேல்
வகிர்வடு வனையவுண்கண் வனிதையே யினிதுகேண்மோ
வுகிர்முனி யிரத்தகாச முப்புசம் பல்லைசோபை
நகிர்தமா நெய்நீர்பின்னர் நவில்வன வேன்றுமுன்னே'

என்றும் கூறுவதால் குணமுள்ள பவழங்களை யெடுத்து இனி கூறப்படும் முறைகள் யாதானும் ஒன்றின்படி சுத்தித்துப் பிறகு மருந்துகளாகச் செய்ய வேண்டுமென உணரவும்.

பவழ சுத்தி:—ஒரு பலம் பவழத்திற்கு ஆறு பலம் பேர்ச்சங்கள் காலையில் விட்டு மாலை வரை வெய்யிலில் உலர்த்தி மறு நாள் காலையிலும் புதிதாக மேற்படி கள்ளை விட்டு வெய்யிலில் வைக்கவும். இம்மாதிரி மேலும் ஐந்து முறை செய்து நீர்விட்டுக் கழுவி யெடுக்கச் சுத்தியாம். இதனை பற்பம் முதலிய மருந்தாக செய்து வழங்கலாம்.

குறிப்பு:--- தேரன் யமக வெண்பா உரை யாசிரியர் அங்ஙனம் கூறியிருப்பினும் அங்ஙனம் செய்ய பவழம் யாவும் கரைந்து விடும். ஆகையால் சம அளவு பேர்ச்சங்கள் ஊற்றி ஊரவைத்து மறு நாள் கழுவி யெடுக்க சுத்தியாம்.

(2) ஒரு நாள் முழுதும் பழச்சாற்றில் ஊரவைத்து மறு நாள் வெந்நீர் விட்டு கழுவி யெடுக்கச் சுத்தியாம்.

பவழபற்பம் செய்முறையும் அளவும்:—ஒரு பலம் சுத்தித்த பவழத்தை எடுத்து கீழுள்ள பட்டியில் குறித்த முறைப்படி அரைத்து உலர்த்தி புடமிடவும், அரைக்கும் ஒவ்வொரு நாளும் குறித்த எடை புதிய சாற்றை உபயோகிக்கவும். பில்லையை உலர்த்த ரவியில் வைப்பது போல பனியிலும் வைப்பது நன்று. முழுபற்பமான பிறகும் பில்லையைப் பனியில் வைக்கப் பூத்து விடும். அதை அரைத்து உபயோகித்துக் கொள்ளவும். இது தேரன் யமக முறையாம்.

| சாறின் பெயரும் | அளவும் பலம் | அரைப்பு நாள் | உலர்த்தும் நாள் வில்லை | கவசம் | புடம் வரட்டி. |
|---|---|---|---|---|---|
| திருவாத்தியிலைச் சாறு. | 6 | 6 | 5 | 1 | 30 |
| கொன்றைச் சமூலச்சாறு. | 5 | 5 | 4 | 1 | 25 |
| வேங்கைச் சமூலச்சாறு. | 6 | 6 | 5 | 1 | 30 |
| வெள்ளெருக்ன் சமூலச்சாறு. | 5 | 5 | 4 | 1 | 25 |

இதனளவு மிளகின் ஐந்து கூறுகளில் ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து கூறுகளாம். இவை முறையே உத்தமம், மத்திமம், அதமம், துணிபு, அனுமத்தாகும்.

வேறு முறைகள்:—(1) பவழத்தை யெருக்கம் பாலில் மூன்று நாள் ஊரவைத்து அதை அகலுக்குள் வைத்து கவச மிட்டு வெய்யி லில் உலர்த்திப் புடமிடவும்.

2. பவழத்தை இலந்தை இலை கற்கத்துள் வைத்து சிலை முதலி யன செய்து புடமிட பற்பமாம். பசுப்பால் தெளித்து வெய்யிலில் உலர்த்திக் கொள்ளவும்.

3. இலந்தையை நீக்கி தைவேளையை மேற்படி உபயோகிக்கவும்.

4, மேற்படியே கீழாநெல்லியினால் பற்பஞ் செய்யவும்.

5. பவழத்தை முயல் ரத்தம் விட்டாட்டி வில்லை தட்டி உலர்த்தி கவசமிட்டுகுக்கிட புடமிட பற்பமாம்.

6. பவழத்தையும் கர்ப்பூர சிலாசத்தையும் சரியெடை கூட்டி வஜ்ஜிரவல்லி சாற்றால் நான்கு சாமங்களாட்டி மேற்படியே கஜ புட மிட்டு மறுபடியும் அங்ஙனமே புளியாரைச் சாற்றாலும் செய்ய பற்பமாம்.

குறிப்பு:—சுத்தித்தப்பொருள்களையே கையாளுக. மேற் சொல்லிய வாறு வில்லையை ரவியிலும் பனியிலும் வைக்க நன்று. பற்பத்தின் அளவும் மேற்கூறியவாறே.

பவழ செந்தூரம் செய்முறையும் அளவும்:—பவழத்தைத் தனியே செந்தூரிப்பது கடினமாம். ஆயினும் தேரன் யமகத்தில் கூறியதை ஈங்கு சொல்வாம். ஒரு பலம் பவழத்தைப் பனஞ்சாறு பருத்திச்சாறு ஓரிதழ்தாமரைச்சாறு உத்தாமணிச்சாறு கமுகஞ்சாறு கடம்பின்சாறு இவைகள் ஒவ்வொன்றாலும் தனித்தனியே அரைத்துப் புடமிடவும். பற்பத்திற்குச் சொன்ன விதிகளை அனுசரிக்கவும். அளவும் அங்ஙனமே.

(தொடரும்)

# அநுபவ முறைகள்

கா. நாகய்யா.

## க்ஷயரோக நிவாரணி நெய்

முயலின் இரத்தம் படி கால், வெள்ளாட்டின் நெய் வீசை அரை, தூதுவேளைச்சாறு படி அரை, முசுமுசுக்கைச்சாறு படி அரை, சியக்கொடிச்சாறு படி அரை, சங்கன்குப்பிச்சாறு படி அரை இவைகளை ஒரு பாத்திரத்திலிட்டு, ஏலம், இலவங்கம், கடுக்காய்ப்பூ, வாலுளுவை, கண்டுபாரங்கி, கண்டங்கத்திரி இவைகளின் தனித்தனி சூரணம் வகைக்குப் பலம் அரை யெடுத்து, ஷை நெய்யில் கலந்து அடுப்பேற்றிக் காய்ச்சவும். சாறுகள் சுண்டி மெழுகு பதம் வரின் நெய்யை இறக்கி வடித்துக்கொள்ளவும்.

உச்சிக்கரண்டி வீதம் காலை, மாலை, இருவேளை அருந்தவும்.

கீழ்க் காணும் தாளகச் சுண்ணத்திற்கு அநுபானமாகக் கலந்து கொடுக்க ஈளை (க்ஷயம்) இருமல், காசம், பரங்கிப்புண், கபாலநோய், செய்யான்கடி, அஷ்டகுன்மங்கள், வாத சம்பந்தமான சீரக்குத்தல், தினவு முதலிய நோய்கள் தீரும். பசியுண்டாம்.

## தாளகச் சுண்ணம்

ஒரு பலம் சுத்தித்த தாளகத்தை ஒரே கட்டியாக எடுத்து அப்ரகதகட்டில் வைத்து முறைப்படி ஒருபடி கற்றாழைச் சாற்றிலும், ஒருபடி வெண்மையான ஈருள்ளிச் சாற்றிலும் சுருக்கிட அது உருகி, சிவந்து கட்டும்.

பிறகு இரசம், பூநீறு, சிற்றண்ட ஓடு இவைகளைச் சுத்தி செய்து வகைக்கு ஒரு விராகன் எடுத்து வெள்ளெருக்கன் பாலால் மெழுகு போல் இருசாமங்கள் அரைத்து ஷை தாளகத்திற்கு அங்கி பூட்டி வெய்யிலில் உலர்த்தவும்.

பூவரசம்பட்டைச் சாம்பல் ஒரு படி, புளியம்புரணிச் சாம்பல் ஒரு படி, மருதம்பட்டைச் சாம்பல் ஒரு படி இவைகளை ஒன்றாய்க் கலந்து, ஒரு பாகியை எரிப்புப் பாண்டத்தில் கொட்டி அழுத்தி அதன்மீது அங்கி பூட்டிய தாளகத்தை வைத்து மேலும் மீதி சாம்பலைக்கொட்டிக் கெட்டிப்படுத்தி வாய் பொருத்தமான ஒரு சட்டியால் மூடி ஏழு மண்சிலைகள் வலுவாய்செய்து உலர்த்தி பிறகு தென்னைமட்டைகளால் நான்கு சாமம் சிறுக எரித்து எடுக்கச் சுண்ணமாம். அங்கியை நீக்கி தாளகத்தைப் பொடித்துக் கொள்க.

அரிசி அளவு ஷை கிருதம், பசு நெய், தேன் இவைகள் ஒன்றில் இருவேளை உண்ணவும்.

## குக்கில் திக்த (கிருதம்) நெய்

கீழ்க் குறித்திருக்கும் ஐந்து கைப்புப் பொருள்களை வகைக்குப் பலம் பத்தாகத் தூக்கிச் சிதைத்து முப்பத்திரண்டுபடி சுத்தநீர் விட்டு நாலுபடி கியாழமாக முறைப்படிக் காய்ச்சி வடிக்க.

1. வேப்பம் பட்டை
2. சிந்திற் கொடி
3. ஆடாதோடை வேர்
4. பேய்ப் புடல்
5. சிறுவழுதுணை

கீழ்க் காணும் பொருள்களின் தனித்தனிச் சூரணத்தை நாலு விராகனை எடுத்து மேற்படி கியாழத்தால் அரைத்துக் கற்கஞ் செய்ய.

| | |
|---|---|
| யவாச்சாரம் | சத்திச்சாரம் |
| வட்டத்திருப்பி | வாய்விளங்கம் |
| தேவதாரு | யானைத்திப்பிலி |
| சிறுப்புன்னைபருப்பு | கோஷ்டம் |
| செவ்வியம் | சதகுப்பை |
| செவ்வல்லிக்கொடி | கொடிவேலிவேர் |
| கடகரோகணி | வெட்பாலையரிசி |
| அதிவிடயம் | சேங்கொட்டை |
| சீரகம் | மோடி |
| மஞ்சள் | வசம்பு |
| சுக்கு | மிளகு |
| ஓமம் | நாபி |

வேப்பம்பட்டை கியாழத்தில் சுத்திச் செய்த மைசாக்ஷி குக்கில் எண்பத்திநாலு விராகனையும் கற்கஞ் செய்ய.

பசுநெய் ஒருபடியும், மேற்சொல்லிய கற்கங்களையும் கியாழத்தில் கலக்கிக், காய்ச்சி பதம் வந்தவுடன் வடித்துக் கொள்ளவும்.

ஒன்று முதல் மூன்று உச்சிக்கரண்டி வீதம் இருவேளை ஒரு மண்டலம் அருந்த சொறி, சிரங்கு, கடுவன், குட்டம் முதலிய சர்மநோய்கள் தீரும். இச்சாபத்தியமாம்.

---

குறிப்பு :—பொருள்களைச் சுத்திச்செய்தே உபயோகிக்கவும். சூரணஞ் செய்ய முடியாதவைகளை அளவாக எடுத்து அரைத்துக் கற்கஞ் செய்யவும்.